www.lkdu.lk

01.எமது நல்வாழ்வு



01. நாம் சுத்தத்தை எவ்வாறு பேணலாம்?

1) தினம் தோறும் குளித்தல்
2) சுத்தமான உடை அணிதல்
3) உடைகளை நேர்த்தியாக அணிதல்.
4) பிறரையும் நல்வழி படுத்தல்
5) கண்ணாடி பார்த்து எங்களின் உடைகளை ஒழுங்கமைத்துக் கொள்ளல்
6) காலை கடைமைகளை சரிவர செய்தல்.

02. உரிய நேரத்தில் வேலைகளை எவ்வாறு செய்து முடிக்கலாம்?

1) நேர சூசியை பேணுதல்.
2) நேரத்தை அவதானித்து செயற்படல்.
3) சுய ஒழுக்கம் பேணுதல்.
4) வேலை செய்வதற்கான ஆயத்தங்களை முற் கூட்டியே செய்து வைத்தல்.

03. உரிய நேரத்தில் வேலைகளை செய்து முடிப்பதால் கிடைக்கும் நன்மைகள்?

1) நேர விரயம் தவிர்க்கப்படும்.
2) ஒற்றுமையாக செயற்பட முடியும்.
3) ஓய்வாக காணப்படலாம்.
4) ஏனைய வேலைகளை செய்ய முடியும்.
5) சிறப்பான எதிர்காலத்தை பெறலாம்.

04. உரிய நேரத்தில் வேலைகளை செய்து முடிக்கமையால் கிடைப்பவை யாவை?

1) காலம் வீணாக்கப்படும்.
2) வேலைகளை ஒழுங்காக செய்ய முடியாது.
3) எதிர்பார்த்த பெறு பேரை பெற முடியாது.
4) மன உளைச்சளடையும்.
5) முரன்பாடுகள் தலை தூக்கும்.

05. சிறுபராயம் முதலே யாதேனும் வேலையை உரிய நேரத்தில் செய்து முடிப்பதால் கிடைக்கும் நன்மைகள் யாவை?



1) எதிர் பார்த்த இலக்கை அடைய முடியும்.
2) மகிழ்ச்சி ஏற்படும்.
3) வெற்றிக்கு வழிவகுக்கும்.
4) புத்துணர்வு ஏற்படும்.
5) தடைகள் தடுக்கப்படும்.



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

www.lkdu.lk

06. பொது இடங்கள் யாவை?

1) நூலகம்
2) பெருந்தெரு
3) பேருந்து நிலையம்
4) பொது மலசலகூடம்
5) வைத்தியசாலை
6) பொது வாகனங்கள்
7) வங்கி
8) பொதுச் சந்தை



07. பொது இடங்களில் நாம் எவ்வாறு நடந்துக் கொள்ள வேண்டும்?

1) அமைதியுடன் இருக்க வேண்டும்.
2) நேர்த்தியாக உடையணிந்து காணப்பட வேண்டும்.
3) நட்புறவுடன் காணப்பட வேண்டும்.
4) அழகாக உரையாட வேண்டும்.
5) ஒற்றுமை பண்புடன் நடக்க வேண்டும்.
6) ஏனையோருக்கு இடையூறு ஏற்படுத்த கூடாது.
7) தேவையற்ற விடயங்களில் ஈடுபடக்கூடாது.

08. ஆரோக்கியமாக வாழ நாம் செய்ய வேண்டிய விடயங்கள் யாவை?

1) சிறந்த உடற்பயிற்சியில் ஈடுபடல்
2) யோகாசனம் செய்தல்.
3) சத்தான உணவுகளை உண்ணுதல்.
4) இறைவழிபாட்டில் ஈடுபடல்
5) சூரிய நமஸ்கார பயிற்சியில் ஈடுபடல்.
6) சுத்தத்தை கடைபிடித்தல்.

09. மனதை ஒருநிலை படுத்துவதற்காக செய்யக் கூடிய செயற்பாடுகள் யாவை?

படிமுறை - 1 உடலைத் தளர்த்துதல்

சௌகரியமாக அமருக. கண்களை மூடிக்கொள்க. மெல்லமெல்ல கை, கால்களைத் தளர்த்துக. கால் விரல்கள், கணைக்கால்கள், முழங்கால்கள், வயிறு, இடுப்பு, நெஞ்சு, தோள்கள், கைகள், கைவிரல்களைத் தளர்த்துக. கழுத்து - தலைப் பிரதேசங்களைத் தளர்த்துக. உள்மூச்சு வாங்குக. வெளிமூச்சு விடுக..... சுவாசிக்குக.

படிமுறை - 2 உள்ளத்தைத் தளர்த்துதல்

''உங்களது உடல் இப்போது தளர்ந்துவிட்டது. உங்களது உடல் இதமாக இருக்கிறது. இனி உள்ளத்தையும் இதப்படுத்துவோம். இனி உள்ளத்தைத் தளர்த்துவோம். தூரத்தே கேட்கும் ஒலிகளைச் செவிமடுங்கள். சுற்றுப்புறத்தில் கேட்கும் ஒலிகளைச் செவிமடுங்கள். அருகே கேட்கும் ஒலிகளைச் செவிமடுங்கள். உங்கள் இதயத்துடிப்பைச் செவிமடுங்கள். எமது சுவாசத்தைச் செவிமடுப்போம். சினக்கும் கவலைப்படும் உள்ளத்தை விடுத்தும் நினைவுகளிலிருந்தும் நீங்குவோம். எண்ணங்களைத் தளர்த்துவோம்.

www.lkdu.lk

உள்ளம் அமைதி பெறட்டும், உள்ளம் இதம் பெறட்டும், உள்ளத்தில் அமைதி நிலைக்கடடும், உள்ளம் இவற்றை உணரட்டும், எண்ணங்கள் நல்லவையாகட்டும்!"

படிமுறை - 3 திடசித்தம்

'எனது உள்ளத்தை என்னால் அமைதிப்படுத்த முடியும். எனது உள்ளத்தின் அமைதியை ஏனையோர் உணரத்தக்க வகையில் நான் நடந்துகொள்வேன். எனது வகுப்பிற்கு - பாடசாலைக்கு - வீட்டிற்கு நான் ஒளியாவேன். நான் ஆசிரியரின் அறிவுரைப்படி நடந்து,
கல்வியில் வெற்றிபெற்றேயாகுவேன். நான் எனது குடும்பத்திற்கும் வீட்டிற்கும் நற்பண்புள்ள ஒரு நல்ல பிள்ளையாவேன். நான் நாட்டிற்கும் உலகிற்கும் பயனுள்ள ஒருவனாவேன்.'

படிமுறை - 4 பிரார்த்தனை

☐ எனது உள்ளம் அமைதியுறுவதால் கிடைக்கும் நிம்மதியை உணரட்டும்! எமது நண்பர்களின் உள்ளங்களும் அதனை உணரட்டும்!

☐ எனது குடும்பத்தார் அனைவரது உள்ளங்களும் அதனை உணரட்டும்! சிறிய வகுப்புகளைச் சேர்ந்த தம்பி - தங்கைகளின் உள்ளங்களும் அதனை உணரட்டும்! பாடசாலையில் உள்ள எல்லோரது உள்ளங்களும் அதனை உணரட்டும்!

☐ பிராணிகளும் மரஞ்செடிகொடிகளும் அதனை உணரட்டும்! அனைவரது உள்ளங்களும்
அமைதி பெறட்டும்! நிம்மதி பெறட்டும்!

படிமுறை - 5 உதிப்பு

எனது உள்ளம் அடக்கமாக உள்ளது. எனது உள்ளத்தால் உணரப்படும் நிம்மதியை வகுப்பு நண்பரக்ளுக்கும் இப்போது என்னால் பகிர முடியும். எனது அண்மை நண்பரக்ளுக்கும் பகிர முடியும். எனது வகுப்பிற்கும் பாடசாலைக்கும் நான் ஓர் ஒளிவிளக்காவேன். எனது குடும்பத்தாருக்கு நான் ஒரு மணி விளக்காவேன். நான் ஓர் ஒளிவிளக்காக உலகிற்கு ஒளியூட்டுவேன்.

10. பாடசாலை சூழலில் மாணவர் எவ்வாறு நடக்க வேண்டும்?

1. பாடசாலையில் நாம் பிறருடன் பண்புடன் பழக வேண்டும்.
2. ஆசிரியரிடம் மதிப்புடன் பழக வேண்டும்.
3. பாடசாலை சூழலை சுத்தமாக பாதுகாக்க வேண்டும்.
4. அயலவருடன் அன்பாக பேச வேண்டும்.
5. வயதில் மூத்தோருக்கு மதிப்பு வழங்க வேண்டும்.
6. அதிபரை கண்டாலோ ஆசிரியரை கண்டாலோ காலை வணக்கம்செலுத்த வேண்டும்.
7. நண்பர்களோடு அன்பாக பழக வேண்டும்.

www.lkdu.lk

11. குழுவாக வேலை செய்வதால் ஏற்படும் விளைவுகள்.

1. பரஸ்பரம் உதவிபுரிதல்
2. கூட்டுணர்வு
3. பாதுகாப்பாக நடந்துகொள்ளல்.
4. ஏனையோரின்பாதுகாப்புக் குறித்துக் கவனஞ்செலுத்துதல்
5. வேலைகளைச் சீராக நிறைவு செய்தல்
6. பகிர்ந்து பரிமாறிக் கொள்ளல்
7. சுய மகத்துவம்
8. தலைமைத்துவத் திறன்களை ஏறபடுத்திக் கொள்ளல்.
9. உபகரணப் பயன்பாடு
10. வாழ்க்கைப் பரிச்சயத்திற்கு வழிகாட்டல் போன்ற விளைவுகள் ஏற்படும்.


12. பின்வரும் பாடலை குழுவாக பாடுக.

ஆசை வை!
பள்ளிக்கூடம் செல்வதற்கு ஆசை வை! - தம்பி
பாடங்களைப் படிப்பதற்கு ஆசை வை!
துள்ளி விளையாடுதற்கு ஆசை வை! - என்றும்
தூய்மை நலம் காப்பதற்கு ஆசை வை!
கள்ளமின்றிப் பழகுதற்கு ஆசை வை! - மிக்கக்
கனிவுடனே பேசுதற்கு ஆசை வை!
வெள்ளையுள்ளம் கொள்வதற்கு ஆசை வை! - வாழ்வில்
வெற்றி பெற உழைப்பதற்கு ஆசை வை!
அன்னை தந்தையரை மதிக்க ஆசை வை! - உனது
ஆசான் சொன்னபடி நடக்க ஆசை வை!
அன்பும் பண்பும் கொண்டொழுக ஆசை வை - மக்கள்
அனைவரையும் விரும்புதற்கே ஆசை வை

➢ **சூரிய நமஸ்கார படிகள்**







www.lkdu.lk

02. நாம் இலங்கையர்

01. இலங்கையின் தேசியக்கொடி

1. ஒரு நாட்டின் பெருமை கௌரவங்களைப் பிரதிபலிப்பவை தேசியக்கொடி, தேசிய சின்னம், தேசிய கீதம் என்பன.
2. இலங்கையின் தேசியக் கொடி வாழேந்திய சிங்கமாகும்.
3. இலங்கை 1948 ஆம் ஆண்டு ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற்ற போது இலங்கையின் தேசியக் கொடி உருவாக்கப்பட்டது.
4. 1972 குடியரசு அரசியலமைப்பு சட்டத்தின் படி தேசியக் கொடியின் நான்கு ஓரங்களும் மஞ்சள் நிறம் இடப்பட்டது.

- ♣ சிங்கத்தை சூழவுள்ள காவி நிறம் / சிவப்பு நிறம் - சிங்கள மக்கள்
- ♣ செம்மஞ்சள் / இளஞ்சிவப்பு – தமிழ் மக்கள்
- ♣ பச்சை நிறம் - முஸ்லிம் மக்கள்
- ♣ கொடியை சுற்றியுள்ள மஞ்சள் நிறம் - தேசிய ஒருமைப்பாடு.

➢ இலங்கையின் தேசியக் கொடி

- தேசிய கொடியில் உள்ள நான்கு அரச இலைகள்.
- மெத்தா – அன்பு
- கருணா – காருண்யம்
- முதித்தா – மற்றவர் மகிழ்ச்சியில் தானும் மகிழ்ச்சியடைதல்.
- உபேக்ஷா – நன்மை, தீமை ஆகிய இரண்டினையும் சமனாகக் கருதுதல்.
- மேலேயுள்ள 4 பண்புகளையும் நான்கு அரச இலைகளும் வெளிப்படுத்துகின்றது.



STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.lkdu.lk

➢ தேசியக் கொடி ஏற்றப்படும் சந்தர்ப்பங்கள்.

1. மேதின விழாக்கள்
2. சுதந்திர தின விழாக்கள்
3. அரச வைபவங்கள்.
4. பாடசாலை விழாக்கள்
5. அரச திணைக்களங்கள் உட்பட பல்வேறு சந்தர்ப்பங்களில் தேசியக் கொடி ஏற்றப்படுகின்றன.

தேசியக்கொடி

- ♣ சிங்கத்தின் தலை – நாட்டின் தலைவர்
- ♣ சிங்கத்தின் உடல் - வீரம்
- ♣ சிங்கத்தின் வாள் - நீதி நேர்மையான ஆட்சி
- ♣ வெள்ளரசு இலைகள் - அன்பு, கருணை, மகிழ்ச்சி, உபேக்ஷா
- ♣ சுற்றியுள்ள மஞ்சள் நிறம் - அறிவாற்றல் தேசிய ஒற்றுமை





www.lkdu.lk

தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சிரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுயி ரெம் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நலை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி நனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனையடைந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் நமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.



- இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் – ஆனந்த சமரகோன்
- இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் – CWW கன்னங்கார
- இதனை தமிழில் மொழிப்பெயர்த்தவர் – நல்லத்தம்பி பிள்ளை
- இலங்கையின் சுதந்திர தினம் பெப்ரவரி 04ம் திகதி
- இலங்கை சுதந்திரம் அடைந்தது 1948

www.lkdu.lk

➢ இலங்கையின் சுதந்திர தினத்தின் போது செய்யக்கூடிய செய்யக்கூடிய செயற்பாடுகள் சில.

1. தேசிய கொண்டாட்டத்தை ஒழுங்கமைத்தல்.
2. வீடுகள் / பாடசாலைகள் / நிறுவனங்களில் தேசியக் கொடியை ஏற்றி வைத்தல்.
3. மற்றைய பல்வேறு சமய நடவடிக்கைகளை ஒழுங்குசெய்தல்.
4. அத்தினத்தை நினைவுபடுத்துவதற்கு மரநடுதல் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்.
5. தேசிய வீரர்களை / வீராங்கனைகளை நினைவுபடுத்துவதற்கு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்.
6. பிராணிகளை விடுதலை செய்தல்.
7. கைதிகளின் விடுதலை.
8. மரநடுகை நிகழ்ச்சி
9. இடர்படும் மாணவர் உள்ள பாடசாலைகளுக்கு / மாணவர் ஒருவருக்கு / சிலருக்கு பாடசாலைக் கருவிகளை வழங்குதல்.

➢ இலங்கையின் தேசியகீதத்தை பாடும் போது மாணவர்கள் நிற்க வேண்டிய ஒழுங்கு.

1. இரு கால்களையும் கைகளையும் உரியவாறு வைத்திருத்தல்.
2. கணுக்கால்கள் இரண்டும் அருகில் இருக்குமாறு கால்களைச் சற்று விலக்கி ஆங்கில அரிச்சுவடியில் எழுத்து 'V' போல வைத்திருத்தல்.
3. உடலை நேராக நிமிர்த்தி வைத்திருத்தல்.
4. தலையை நேராக வைத்து முன்னாலுள்ள இலக்கொன்றை நோக்கி இரு கண்களையும் திறந்து வைத்திருத்தல்.
   (கண் மட்டத்திலிருந்து நேரே முன்நோக்கிப் பார்த்தல்)
5. இரு கைகளும் கீழ் நோக்கி இலகுவாக இருக்குமாறு கை முஷ்டியைப் பெருவிரல் தசையை நோக்கி இருக்கமாறு வைத்திருத்தல்.
   (உடலுக்கும் இருகைகளுக்கும் இடையே இடைவெளி இருத்தலாகாது.)

www.lkdu.lk

➢ இலங்கையின் தேசிய இலச்சினை

- ✓ தேசிய சின்னம் பயன்படுத்தபடுவது 1972 இல் இலங்கை குடியரசான பின்னர்.
- ✓ தேசிய சின்னத்திலுள்ள அடையாளங்கள் குறிப்பன.



தர்மசக்கரம் - (நீதி, நேர்மை)
மலர் இதழ் - (தூய்மை)
நெற்கதிர் - (செளபாக்கியம்)
சிங்கம் - (வீரம்)
சூரியன் - (உலகநிலை)
சந்திரன் - (உலகநிலை)

தேசிய பறவை காட்டுச்சேவல்



தேசிய மரம் நாக மரம்



தேசிய மலர் அல்லி மலர்



இலங்கையின் தேசிய மலர் - நீலோற்பலம் (Water Lily) (ஆசிரியர் வழிகாட்டியின் படி)

மாதிரி

www.lkdu.lk



தேசிய விளையாட்டு வொலிபோல் 6பேர்

ஆசிரியர் வழிகாட்டியின் படி உள்ளவை.

□ இலங்கையின் தேசியப் பறவை - காட்டுக்கோழி
□ இலங்கையின் தேசிய மலர் - நீலோற்பலம் (Water Lily)
□ இலங்கையின் தேசிய விளையாட்டு - கரப்பந்து (வொலிபோல்)
□ இலங்கையின் தேசிய மரம் - நாகமரம்

03. ஊர்வலங்களும் அவற்றுக்குரிய மதப்பிரிவினரும்.


□ வேல் ஊர்வலம் - இந்துக்கள்
□ கதிர்காம ஊர்வலம் - இந்து, பௌத்தம்
□ மீலாத் விழா - இஸ்லாம்
□ கத்தோலிக்க / கிறிஸ்தவ தேவாலய ஊர்வலங்கள் - கிறிஸ்த்தவர்கள்
□ கரோல் பாடல் நிகழ்வுகள் - கிறிஸ்த்தவர்கள்
□ தலதா ஊர்வலம் - பௌத்தர்கள்
□ மிஹிந்து ஊர்வலம் - பௌத்தர்கள்

ஊர்வலங்களில் அவதானிக்க கூடியவை

பஜனைகள், பாடல்கள், ஆட்டங்கள், வாத்தியகருவிகள் இசை, கலாச்சார நடனங்கள், வினோத உடைகள், வேடதாரி நடனம், தீப்பந்தம் சுற்றுதல்.

ஊர்வலங்கள் நடத்தப்பட காரணங்கள்?

1) மத அனுஸ்டானங்களில் ஈடுபாடல்
2) கலாச்சார பண்பாட்டு அம்சங்களை அவதானிப்பதற்கு.
3) இறைச்சிந்தனையை வளர்ப்பதற்கு.
4) மக்களிடம் பண்பாட்டை கற்பிக்க.
5) பண்டைய பாரம்பரியங்களை பேணுவதற்கு.



04. இலங்கையின் இனத்தவர்கள்

➢ **தமிழர்கள்**

♣ தாய் மொழி தமிழ்
♣ அனேகமானோர் சைவ சமயம் சிலர் கிறீஸ்தவ சமயம்
♣ வணக்கஸ்தலம் : கோயில்
♣ புனித நூல்: பகவத்கீதை
♣ உடை:
♣ ஆண்கள்: வேட்டியும், சால்வையும்
♣ பெண்கள்: சேலை





மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

www.lkdu.lk

➢ சிங்களவர்கள்



- ♣ தாய்மொழி சிங்களம்
- ♣ அனேகமானோர் பௌத்த சமயம், சிலர் கிறீஸ்தவ சமயம்
- ♣ வணக்கஸ்தலம் - விகாரை
- ♣ புனித நூல் - திரிபீடம்
- ♣ உடை - ஆண்கள்: சாரமும், சேட்டும், பெண்கள்- சேலை

➢ முஸ்லிம் மக்கள்



- ♣ அனேகமானோர் தமிழ் சிலர் சிங்களம்
- ♣ மதம்: இஸ்லாம்
- ♣ வணக்கஸ்தலம்: பள்ளிவாசல்
- ♣ புனித நூல்- திருக்குர்ஆன்
- ♣ உடை- ஆண்கள் சாரமும் சேட்டும் தொப்பியும்
- ♣ பெண்கள்: பர்தா சேலை முக்காடு போட்டிருப்பார்.

➢ கிறிஸ்த்தவர்கள்



- ♣ அனேகமானோர் ஆங்கிலம் சிலர் சிங்களம் அல்லது தமிழ் பேசுவர்.
- ♣ மதம்: கிறீஸ்தவம்
- ♣ வணக்கஸ்தலம்: தேவாலயம்
- ♣ புனித நூல்: பைபிள்
- ♣ உடை: ஆண்கள் கோட்டும் சேட்டும் கழுத்துப்பட்டியும்
- ♣ பெண்கள்: கவுண்

www.lkdu.lk

➢ வேடுவர்கள்

- ♣ வேடுவ மொழியும் சிலர் தமிழ் சிலர் சிங்களம் பேசுவர்
- ♣ வேடுவர் மதம் (சூரியன், சந்திரன், அக்கினி)
- ♣ ஆண்கள்: சாரமும் தோளில் கோடரியும் வைத்திருப்பர்.
- ♣ பெண்கள்: துணியினால் உடலை மறைத்திருப்பர்.



➢ இனத்தவர்களும் அவர்களின் பண்டிகைகளும்.

1. பன்சல - வெசாக், பொசான், எசல, சங்கமித்தா ஜயந்தி, மகிந்த ஜயந்தி
2. கோயில் - மகா சிவராத்திரி, நவராத்திரி, விசேட பூசை
3. தேவாலயம் - நத்தார் பண்டிகை, பாஸ்கு வருடாந்த விழா
4. மஸ்ஜித் - றம்ழான், ஹஜ் பெருநாள்கள்.











ஒவ்வொரு இனத்தவரும் பின்பற்றப்படும் சில அழங்கார வேலை பாடுகளும் கலைநுட்ப செயற்பாடுகளும்

1. தமிழரினால் நிர்மாணிக்கப்படும் கோல அலங்காரங்கள் வரையச்செய்தல்
2. தமிழ், முஸ்லீம் இனத்தவர்களால் உள்ளங்கைகளில் இடும் மருதாணிக் கோலங்ளை இடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
3. ஆலயங்கள், மற்றும் கலைவிழாக்களின் அலங்காரங்கள்
4. வெசக்தின அலங்காரங்கள்
5. நத்தார் தின அலங்கார வேலைகள்
6. முக்கியமான விழாக்களின் போது விட்டை அலங்காரம் செய்தல்

www.lkdu.lk

சமய வேறுபாடுகளை விடுத்து மக்கள் சமய நிகழ்வுகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்கள்.

1) சிவனொளிபாதமலை யாத்திரை
2) சகல பக்தர்களும் ஈடுபடும் கதிர்காம யாத்திரை
3) சீலம் காப்போருக்கு அன்னதானம் வழங்குதல்
4) புத்தாண்டுப் பலகார வகைகளை ஏனைய சமயத்தவர்களுக்கும் பகிர்ந்து பரிமாறுதல்

05. ஒவ்வொரு மதப்பிரிவினரின் பிரதான உணவுகளை எழுதுக.

1) தமிழர்கள்.....
2) சிங்களவர்கள்.....
3) முஸ்லிம்கள்.....
4) கிறிஸ்த்தவர்கள்.....

06. இலங்கை மக்களின் சனத்தொகை மதிப்பீடு 2012 இன் படி.

1) தமிழர்கள் - 15.37 சதவீதம்
2) சிங்களவர்கள் - 74.9 சதவீதம்
3) முஸ்லிம்கள் - 9.2 சதவீதம்
4) பறங்கியர் – 0.18 சதவீதம்
5) மலாயர் – 0.2 சதவீதம்
6) வேடுவர் – 0.14 சதவீதம்

இலங்கையை கைப்பற்றியவர்கள். காலப்பகுதிகள்

1) போர்த்துக்கேயர் - 1505 – 1658
2) ஒல்லாந்தர் – 1658 – 1796
3) ஆங்கிலேயர் – 1796 – 1948

1815 இல் இலங்கை பிரித்தானியர்களால் முழுமையாகக் கைப்பற்றப்பட்டது.

07. அரச நிறுவனங்கள் யாவை?

1) மாவட்ட செயலகம்
2) பிரதேச செயலகம்
3) அரச மருத்துவமனை
4) அரச வங்கிகள்
5) பொது சுகாதார பணிமனை
6) கிராம சேவையாளர் பணிமனை
7) சமுர்த்தி வங்கிகள்
8) இலங்கை போக்குவரத்துச்சபை
9) கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம்

www.lkdu.lk

தனியார் நிறுவனங்கள் யாவை?

1) தனியார் வங்கிகள்
2) சிறப்பு அங்காடிகள்
3) தனியார் மருத்துவமனைகள்
4) தனியார் கல்வி நிலையங்கள்
5) தனியார் போக்குவரத்து
6) தனியார் முச்சக்கர சங்கம்

08. பின்வரும் பாடலை குழுவாக பாடுக.

தேசப்பற்றுப் பாடல்

மகாவலி பாய்வதும் இந்நாடே
மாணிக்கம் விளைவதும் இந்நாடே
பாவலர் இசைப்பதும் இந்நாடே
பாவளம் நிறைந்ததும் இந்நாடே
செந்தமிழ் வாழ்வதும் இந்நாடே
சிங்களம் வாழ்வதும் இந்நாடே
ஆழ்கடல் சூழ்ந்ததும் இந்நாடே
அகிம்சை வாழ்வதும் இந்நாடே
மலைகள் உயர்ந்ததும் இந்நாடே
வயல்கள் நிறைந்ததும் இந்நாடே
தேயிலை வளர்வதும் இந்நாடே
தெங்குகள் நிமிர்வதும் இந்நாடே

- நல்லை அமிழ்தன்

LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk || www.lkedu.lk
76667-4945

www.lkdu.lk

பின்வரும் இலங்கை படத்தில் மாவட்டங்களை அறிந்து நிறம் தீட்டி மாவட்டங்களின் பெயரை எழுதுக.

1. .....
2. .....
3. .....
4. .....
5. .....
6. .....
7. .....
8. .....
9. .....
10. .....
11. .....
12. .....
13. .....
14. .....
15. .....
16. .....
17. .....
18. .....
19. .....
20. .....
21. .....
22. .....



23. .....
24. .....
25. .....

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.lkdu.lk

பின்வரும் இலங்கை படத்தில் மாகாணங்களை அறிந்து நிறம் தீட்டி மாகாணங்களின் பெயரை எழுதுக.

1. .....
2. .....
3. .....
4. .....
5. .....
6. .....
7. .....
8. .....
9. .....



பின்வரும் சின்னங்களை அறிந்து எம்மதத்தவர்கள் என எழுதுக.



.....



.....



.....



.....